Registered No. M. 329.

Vol. I. February 1903. No. 10.

THE SUGUNA SUNDARAM.

A MONTHLY TAMIL JOURNAL.

சுகுணசுந்தரம்.

(மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.)

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாராநெறி"—குறள்.

CONTENTS.

1. Atheism and Its Confutation by Ganesa Ariar 218
2. Age limit of Rama and Sitha ... 223
3. Perumal Thirumoli 227
4. Partiality and Treachery among brothers or Scandal from friendship towards female sex 230
5. Rajam and Thangam (A Small Story) 233
6. General News 237

அட்டவணை.

1. சா (चा) ர்வாக மதமும், அதன் கண்டனமும். (கணேச ஆரியர் ... 218
2. இராமர் ஸீதை இவர்களின் வயோநிர்ணயம் ... 223
3. பெருமாள் திருமொழி ... 227
4. பக்ஷபாதமும், பிராத்ரு துரோகமும் அல்லது பிறமாதர் நட்பினாலுண்டாகும் நிந்தை ... 230
5. இராஜமும், தங்கமும். (ஒரு சிறு கதை) ... 233
6. சமாசாரக் குறிப்புக்கள். ... 237

Published by

T. S. SUBBARAMA AIYER, *Inamdhar*,

TURAIYUR.

All Rights Reserved.

Printed at the "Minerva" Press, by Thompson & Co., Broadway, Madras.

தமிழ் புத்தகங்கள்.

		ரூ.	அ.	ப.
1.	ஞானபோதினி (Vol. I, II, III, IV. Each) ...	2	8	0
2.	வர்ண வைத்திய சாஸ்திரம் ...	0	8	0
3.	மச்சபுராணம் (செய்யுள்) ...	2	8	0
4.	திருமுல்லைவாயிற்புராணம் (காலிகோகட்டடம்) ...	0	10	0
	,, (மார்பில் கட்டடம்) ...	0	8	0
5.	செய்யுட்கோவை (காலிகோ பவுண்டு) ...	0	13	0
	,, (ஸ்டிப் போர்ட்) ...	0	10	0
6.	விவேக விளக்கம் ...	0	4	0
7.	வாசகத்திரட்டு ...	1	4	0
8.	நகைப்பைத்தியம் (முதற்பாகம்) ...	0	8	0
	,, (இரண்டாம்பாகம்) ...	0	8	0
9.	மரியாதைராமன் கதை, அப்பாஜிகதை ...	0	1	6
10.	இந்தியாவின் எதிர்கால நிலைமை (விவேகாநந்த சுவாமிகள் செய்த பிரசங்கம்) ...	0	1	0
11.	இந்தியா வாழ்க்கையில் வேதாந்த நிலைமை ...	0	1	6
12.	ரூபாவதி புதிய நாடகம் ...	1	0	0
	,, (ஸ்டிப்போர்ட்) ...	1	8	0
13	கலாவதி (காலிகோபவுண்டு) ...	1	12	0
14.	ஸ்ரீ கிருஷ்ண நாடகாலங்காரம் ...	0	12	0
15.	கலிங்கத்துப் பரணி ...	0	8	0
16.	நளவெண்பா (மூலம்) ...	0	4	0
17.	சரசாங்கி ...	1	0	0
18.	பஞ்சதந்திர வசனம் ...	0	4	0
19.	ஔவை குறள் மூலம் ...	0	2	0
20.	மணியசிவனார் சரித்திரம் ...	0	2	0
21.	மறைசையந்தாதி யுரை ...	0	5	0
22.	தற்காப்பு நியமம் ...	0	1	0
23.	நாடகவியலுரை ...	0	8	0
24.	சித்தாந்தப் பிரகாசிகை ...	0	2	0
25.	சுகுணசுகேசர் ...	0	12	0
26.	லீலாவதி சுலோசனை (Cloth) ...	1	0	0
	(Paper) ...	0	12	0
27.	சூளாமணி வசனம் ...	0	12	0
28.	பட்டணத்தார் பாடல் மூலம் ...	0	4	0
29.	பட்டணத்தார் பாடலுரை ...	1	12	0

இப்புத்தகம் வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிக்கொள்க.

தாம்ஸன் கம்பெனி,
பாபம்ஸ் பிராட்வே, சென்னை.

சுகுண சுந்தரம்.

(மாதந்தோறும் பிரசுரிக்கப்படுந் தமிழ்ப்பத்திரிகை.)

வால்யம் 1.] 1903ஞு பிப்ரவரிமீ. [நே. 10.

RATES OF SUBSCRIPTION.

Yearly including Postage	Rs.		3	0	0
Half Yearly	,,	,,	1	12	0
Single Copy	,,	,,	0	5	0
Back numbers	,,	,,	0	6	0

Foreign Subscriptions 6 s. Per Annum.

Subscriptions begin with 1st May of each year.

A discount of 8 as. and 4 as. respectively will be allowed to regular annual and half yearly Subscribers, and a grace of two months to the former and one month to the latter Subscribers will be granted for the prepayment of Subscriptions, to entitle them to the discount aforesaid.

A copy will be sent free to those who contribute articles to the journal.

The Editor will not undertake to publish any matter other than he deems worth publishing. Contributors are requested to write their names and address legibly.

The Managing Proprietor reserves to himself the right of republishing all matters that appear in this journal. All correspondents are requested to enclose, postage stamps to ensure a reply by quoting the register number.

Donations will be thankfully received.

Missing numbers cannot be replaced without payment if not brought to notice then and there.

சந்தாவிவரம்.

ஞு 1 க்குதாபாற்கூலிஉள்படரூ.			3- 0-0
ஆறுமாதத்திற்கு	,,	,,	1-12-0
பிரதி ஒன்றுக்கு	,,	,,	0- 5-0
பழயபிரதி	,,	,,	0- 6-0

இப்பத்திரிகைக்கு மேமீ முதல் சந்தாக் கணக்கு வைக்கப்படும். மே மாதத்துக்குள் சந்தாத் தொகையை முன்பணமாய்ச் செலுத்துபவர்களுக்கு வருஷச் சந்தாவில் அணு 8-ம், ஆறுமாதச் சந்தாவில் அணு 4-ம், தள்ளிக்கொடுக்கப்படும்; வருஷந்தோறும் கிரமமாய்ச் சந்தா செலுத்துபவர்களுக்கு இரண்டுமாதத் தவணையும், ஆறுமாதத்திற்கு ஒருதடவை செலுத்துபவர்களுக்கு ஒருமாதத் தவணையுங் கொடுக்கப்படும். விஷயங்க ளெழுதிக் கொடுக்கும் பண்டிதர்களுக்கு இனமாக ஒரு புத்தகம் அனுப்பிவரப்படும்.

அறிவிப்பு:—இந்தப்பத்திரிகைக்குப்பண்டிதர்கள் எழுதிக்கொடுக்கும் விஷயங்கள் தகுந்த யோக்யதையுடையவைகளா யிருந்தாலன்றி பிரசுரிக்கப்படமாட்டா; விஷயமெழுதிக் கொடுப்பவர் அதில் தங்கள் கையொப்பமும், விலாஸமுந் தெளிவாயெழுதியனுப்பவேண்டும்.

☞ புத்தகரூபமாய் வெளிப்படுவதற்குரிய விஷயங்களை, எழுதி யனுப்பினோர் அனுமதியை எதிர்பாராமலே அச்சிடுவதற்கு எமக்கு சுதந்திரமுண்டு.

நன்கொடைகளை வந்தனங்களுடன் பெற்றுக்கொள்ளப்படும்.

தவறிப்போகும் நெம்பர்கள் அப்போதைக்கப்போது நம்முடைய நோட்டீசுக்குக் கொணடுவந்தாலன்றி, பணம் செலுத்தாமல் மறுபடி அனுப்பப்பட மாட்டா.

மானேஜிங் ப்ரொப்ரைட்டர்,
சுகுண சுந்தரம் ஆபீசு, துறையூர்.

சா (चा) ர்வாக மதமும் அதன் கண்டனமும்

(சார்வாக மதத்தின் இறுதி பாகத்தின் கண்டனம்)

அனுமானப் பிரமாணம் ஒப்புக்கொள்ள வேண்டியது அவதியம். வியாப்தி ஞானத்திற்கு உபாய மில்லையென்று கூறியது மிகவும் அயுக்தம். முன் அனேக இடங்களில் அக்நியிலிருந்து புகை யுண்டாவதைப் பார்த்து அதனல் எங்கெங்கே புகையிருக்கிறதோ, அங்கங்கே நெருப்புமிருக்கிறதென்று புகைக்கும் நெருப்புக்கு மிருக்கிற சாஹசரியத்தைத் தீர்மானம் பண்ணிக்கொள்ளுகிருன். இந்த ஸாஹசரிய நியமமான வியாப்தியானது புகைக்கும் நெருப்புக்குமுள்ள காரியகாரண பாவஸம்பந்தத்தால் சுலபமாக அறியக்கூடியது தான்.

" कार्यकारणभावाद्वा स्वभावाद्वानियामकात् ।
अविनाभावसंबन्धो दर्शनान्तरदर्शनात् ॥"

என்ற நியாயத்தின்படி வியாப்தி ஞானம் சுலபமாகையால் உபாதி ஞானமும் சுலபம்தான். ஆகலின் அனுமானப்பிரமாணத்தில் தோஷமிருப்பதாக நினைப்பது மூடத்தன்மையேயாம். தவிர அனுமானப் பிரமாணத்தை ஒப்புக்கொள்ளாதவர்களது வசனம் "எனது தாய் மலடி" என்று சொல்லுகிறவர்களது வசனம் போன்றதுதான். அனுமானப் பிரமாணத்தினலேயே எல்லா வியவகாரங்களையும் நடத்திக்கொண்டிருக்கு மிவர்கள் அனுமானப் பிரமாணத்தை ஒப்புக்கொள்ள மாட்டோமென்ருல் அது பிதற்றலல்லவா ? இவர்கள் கண் தான் பார்க்கிறது என்று எப்படி அறிவார்கள்? எல்லா வஸ்துக்களையும் பார்க்கிறது நேத்திரம், அந்நேத்திரத்தைப் பார்க்கிறது எது ? என் கண் இப்பொழுது நன்ருய்ப் பார்க்கிறது என்கிருர்களே. என் கண் சில நாள்களுக்கு முன் தெரியவில்லை யென்றும் சொல்லுகிருர்களே. கண் பார்க்கிற தென்பதையும், கண் தெரியவில்லை யென்பதுமான அனுமானப்பிரமாணத்தை யொப்புக்கொள்ளாத இவர்கள் எப்படி தெரிந்துகொள்ளக்கூடும் ? அனுமானப்பிரமாணத்தை ஒப்புக்கொள்ளாவிடில், தனது நேத்திரத்தைப் பார்ப்பதற்கு மூன்ருவது நேத்திரமொன்று வேண்டுமே. அதாவது நேத்திரத்தை விழித்தால் வஸ்துக்கள் புலப்படுகின்றன. நேத்திரத்தை மூடிக்கொண்டால் வஸ்துக்கள் புலப்படுகிறதில்லை, ஆகையால் நேத்திரம்தான் பார்க்கும் இந்திரியமென்று அனுமானத்தால் அறிந்துகொள்ளுகிருர்கள். எவரெவர்கட்கு நேத்திரேந்திரியங் கெடாமலிருக்கின்றதோ அவர்கள் பார்க்கிருர்கள், எவரெவர்கட்கு நேத்திரேந்திரியம் கெடுதலாயிருக்கிறதோ அவரவர்கட்கு வஸ்துக்கள் புலப்படுகிறதில்லை. ஆகையால் நேத்திரமே பார்க்கிற இந்திரியம் என்று அனுமானத்தினலல்லவா நேத்திரம்

பார்க்கிறதென்று அறிந்துகொள்ளுகிறார்கள். இவ்வாறு அநுமானத்திலேயே வியவகரித்துக்கொண்டிருப்பவர்களே அநுமானத்தை ஒப்புக்கொள்ளுகிறதில்லையென்றால் மிகவும் அஸங்கதமல்லவா? புத்திரன் தனது தாயை மலடி என்று சொலலுகிறதற்கு ஒப்பானதேயொழிய இவ்விஷயம் யுக்தமல்ல. ஆகையால் அநுமானப்பிரமாணத்தை அவசியம் ஒப்புக்கொள்ளக்கூடியது தான்.

சுவபாவமே உலக வைசித்திரியம். இப்பிரபஞ்சமும் சுவபாவமேயன்றி வேறு காரணமல்ல என்று சா (சா)ர்வாகர்கள் கூறியதைப்பற்றி சற்று விசாரிப்பாம் :—

சுவபாவமென்பது சலன முள்ளதா? அல்லது சலன மற்றதா? சலன முள்ளதென்றால் உருவ மிருக்கவேண்டுமே; அதற்கே உருவமில்லை. ஆனது பற்றி சலனமுள்ள தென்பதொவ்வாது: தவிர உலகிலிருக்கும் வஸ்து ஒவ்வொன்றிற்கும் பல சுவபாவமாதல் வேண்டும். அநுமானப்பிரமாணத்தை ஒப்புக்கொள்ளாத நீவிர் அநுபவத்திற்கும் பிரத்தியக்ஷத்திற்கும் ஒவ்வாத சலனமுள்ள பல சுவபாவங்களை ஒப்புக்கொள்ளுவது குற்றம்; சலன மல்லாததெனில் ஒவ்வொரு வஸ்துக்களினிடமிருந்து சலனமற்றிருக்கும் சுவபாவங்கள் ஒரு காரியத்தையுமுண்டாக்க முடியாது. ஏனென்றால், ஆத்மபாவ மில்லாமையாற்றான் உலகில் காரணமென்பது காரியத்தைக்கூடச்சாருவதைக் காண்கின்றோம். அஃதெங்ஙனமெனில், மண்குடத்திற்கும், நூல் வஸ்திரத்திற்கும், தங்கக்குண்டலத்திற்கும் காரணம், குடம் நசித்தால் மண்ணாகவும், வஸ்திரம் நசித்தால் நூலாகவும், குண்டலத்தையழித்தால் சுவர்ணமாகவும் காண்கிறோம். இம்மூன்றும் நாசமடையாமலிருக்கும்போது, குடத்தில் மண்ணையும், வஸ்திரத்தில் நூலையும், குண்டலத்தில் சுவர்ணத்தையும் பார்க்கின்றோமல்லவா? குடம் சுவபாவம், படம் சுவபாவம், குண்டலம் சுவபாவம் என்றறிகிறார்களா? குடமுளது, படம் விளங்குகிறது, குண்டலம் இச்சிக்கப்படுகின்றது என்றறியாமலிருக்கிறார்களா? உளதென்பதால் அறியப்படும் சத்தையும், விளங்குகிற தென்பதால் அறியப்படும் சித்தையும், இச்சிக்கப்படுகிற தென்பதால் அறியப்படும் ஆனந்தத்தையும் இலக்ஷணமாய்க் கூறப்படும் ஆன்மாவையே காரணமென்பது ஏற்குமேயன்றி மற்றதல்ல. மண்ணின் சுவபாவம் கடத்திற்குக் காரணமென்றும், பருத்தியின் சுவபாவம் வஸ்திரத்திற்குக் காரணமென்றும், கூறுவோமேயென்றால், அதுவும் பொருந்தாது. காரணமான மண்ணின்கண் வளைதல் முதலான சுவபாவங்கள் கடத்தில் காணப்படுவதில்லை. முன் மண்ணிடத்தில் வளைதலுக் கேதுவாயிருந்த நீரற்ற அக்குடம் பக்குவமான பிறகும் நீரில் பொடித்துப்போட்டுப் பிசைந்தாலும், அம்மண் வளைவதில்லை,

ஆனதுபற்றி மண்ணின் சுவபாவம் கடத்தில் காணுமையால் மண்ணின் சுவபாவம் கடத்திற்குக் காரணமென்பது முசிதமல்ல. சுபாவத்திற்கு சுவதந்திரமில்லை யாதலால் காலாதிகளை யொப்புக்கொள்வது போலன்றி இப்பிரபஞ்சத்திற்கு முக்கிய காரணமாக சுவபாவத்தை ஒப்புக்கொண்டோமில்லை. மேலும் யாம் பார்க்கும் ஒவ்வொரு காரணவஸ்துவும் தொழிலைச்சார்ந்தே காரியமாகிறது. தொழிலற்ற சுவபாவம் எங்ஙனம் காரணமாகும், நீங்கள் கூறும் ஆன்மாவுக்குத் தொழில் படுதல் எது ? அவ்வாத்மா அஸங்கன் என்கிறீர்களே யென்றால், மாயாவசத்தாலென்போம். அதெங்ஙனம் மாயாவசப்படுதலென்றால், தாமரையிலொட்டிய தண்ணீரைப்போ லென்போம். தவிர கடமுளது படமுளது என்று காரியத்தின் அனுபவத்தை யாம் அடைந்தோமில்லையா ? ஆகையால்,சிலந்திப்பூச்சி உபாதானமும் நிமித்தமுமான காரணமாய் நூலைக் குறித்திருப்பது போல் ஆத்மாவைக் காரணமாக யாம் கூறுவோம், இவ்விதமாக மாயையால் பிரபஞ்சத்தையுண்டாக்கிய பரமேசுவரனென்னும் நாமதேயத்தை வகித்த அவ்வீசுவரனது உச்சுவாஸ நிச்சுவாஸ ரூபமே வேதமென்று யாம் கூறுவாம். அவ்வீசுவரனதாக்ஞையால் ஸ்ருஷ்டி ஸ்திதி லயதிரோதாநுனுக்கிரகமென்று சொல்லப்படும் ஐந்தொழிலுமுள்ளது. இதுநிற்க,

பிராமணனென்பதான ஜாதிப் பிரிவு ஒவ்வாதென்றதைச் சற்று விசாரிப்பாம். பிராமண னெவன் ? ஜாதி, சரீரம், தருமம், ஞானம் என்ற விஷயங்களால் பிராமணனென்றும், அவ்விதமே மற்ற மூன்றுவிதமான பிரிவும் சித்தியாதென்றும் சா(चा)ர்வாகர்கள் கூறுவது அவர்களது அறிவின்மையைத் தெளிவாய் வெளியாக்குகிறது.

சூதசம்ஹிதையில்,

“ भगवत्सर्वशास्त्रार्थ परिज्ञानवतांवर ।
जातिनिर्णयमस्माकं वदवेदैकदर्शितम् ॥
हिरण्यगर्भोभगवान् ब्रह्माविश्वजगत्पतिः ।
आस्थायपरमामूर्तिं तस्मिन्नुपेन्द्रसमुद्भवे ॥
तस्यवेदाविदांश्रेष्ठा ब्रह्मणःपरमेष्ठिनः ।
महादेवाज्ञयसर्व वासनासाहितान्मुखात् ॥
ब्राह्मणाब्राह्मणास्त्रीभि सहजायास्तपोधनाः ॥”

என்று ஜாதி நிர்ணயப்பிரசனத்தில கூறியுள்ளபடி, நைமித்திக பிரளயத்தின் இறுதியில் அனேக சிரஸுகளும் அனேக நேத்திரங்களும், அதிக லக்ஷணங்களும உடையவரான ஸ்ரீமகா விஷ்ணுவினம்சமான நாராயணன் திருப்பாற்கடலில் யோக நித்திரை புரியுங்கால் அவரது நாபீகமலத்தினின்றும் உதித்த பிரமாவினுடைய முகத்திலிருந்து ஸ்திரீகளோடுகூட,

" ब्राहणोस्यमुखमासित् । बाहूराजन्यः कृतः ।
ऊरूतदस्य यद्वैश्यः । पद्भ्यांशूद्रोअजायत ॥"

என்று சர்வோபநிடதசாரமாகிய 'புருஷ சூக்தம்' கூறியபடி, பிராமணர்களும், பாஹுக்களிலிருந்து க்ஷத்திரியர்களும், தொடைகளிலிருந்து வைசியர்களும், கால்களிலிருந்து சூத்திரர்களும் உண்டானார்கள். இவ்வாறு குறிக்கப்பட்ட பிராமணர்களின் வம்சத்தவரும், சாஸ்திரீயமாக விவாஹஞ்செய்துகொண்டவர்களிடத்தி னுண்டானவர்களும், தங்கள் ஜாதிக்குறிய வைதீக ஸம்ஸ்கார வித்யா விருதாதிகட்கு பரம்பராப் பிரயோஜனமான ஆத்மஞானத்தை உடையவர்களும், அல்லது ஆத்ம ஞானத்தில் இச்சையுள்ளவர்களு மானவர்களே பிராமணர்கள். இவ்விதமாக முறையே ஒவ்வொரு வர்ணங்களும் பிரிவைப்பெற்றன. ஒவ்வொரு வருணத்தவரும் தங்கட்குரிய கருமங்களை யனுஷ்டிக்க வேண்டியதும், சாஸ்திரீயமல்லாத கருமங்களை அனுஷ்டிக்கக்கூடாததையும் பற்றி விவரமாகத் தெரிந்துகொள்ள வேண்டியதற்காக வேதம், ஸ்மிருதி, இதிகாஸ புராணங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஸ்ருஷ்டி யாதியில் ஈசுவரன் பிரமனுக்கு வேதங்களை உபதேசித்தனர் என முன்னமேயே யாம் கூறியிருக்கின்றனம். அதை யிங்கு சற்று விவரிப்பாம்.

ஈசுவரன் அநாதியாய்த் தன்னிடத்திலுள்ள வேதத்தை யுபதேசித்தாரே யன்றி மற்றெவராலும் இயற்றப்பட வில்லையானது பற்றி அநாதியென்கிறோம். வேதங்கள் ஈசுவரனா லுபதேசிக்கப்பட்டபோது ஒன்றாக விருந்தது. பிறகு,

" एकयेवद्विचावेदो वेदार्थश्चैकएवतु ।
तथापिमुनिशार्दूला श्शाखाभेदेनभादिताः ॥
आम्नायापरयायुक्तो व्यासोजज्ञेगुरुर्मम ।
सपुनर्देवदेवस्य प्रसादादाम्बिकापतेः ॥
संक्षिप्यसकलान्वेदान् चतुर्थाकृतवान्मुनिः ।"

என்று 'சூதசம்ஹிதை' கூறுகிறபடி மகத்தாயிருக்கிறபடியால், அற்ப புத்திகளால் முழுவது மறிய மாளாதென வியாஸபகவான் ருக்யஜுஸ்ஸாமம் அதர்வணம் என்று நான்கு பிரிவாக்கி,

" एकविंशतिभेदेनऋग्वेदोभेदितोमुना ।
यजुर्वेदोद्विजायेक शतभेदेनभेदितः ॥
नवधाभेदितोथर्वः वेदासामस्सहस्रधा ॥"

என்றபடி, பின்னும் சாகா பேதத்தால் ருக்வேதத்தை 21 பாகமாகவும், யஜுர்வேதத்தை 101 பாகமாகவும், அதர்வவேதத்தை 9 பாகமாகவும், ஸாமவேதத்தை 1000 பாகமாகவும் பேதித்தனர். வேத ஸ்மிருதீதி

ஹாஸ புராணங்களால் விதிப்படி அந்தந்த வருணத்தார்கள் தங்கட்குரிய கரும தரும நியாயங்களைத் தெரிந்துகொண்டு அவ்வழி நடக்காவிடில் மீளா நரகத்திற்காளாக வேண்டியதாகும்.

தவிர இச்சீவன் கர்ப்பத்திலிருக்கும் பொழுது ஒன்பதாவது மாதத்தில் சரீரத்திற்குரிய எல்லா யிலக்ஷணங்களும் பொருந்துகின்றன.

" नवमेमासिसर्वलक्षणसंपूर्णोभवति ।
पूर्वजातिंस्मरतीति कृताकृतंचकर्मभवति ।
शुभाशुभंचकर्मविन्दति ॥"

என்று கர்ப்போபநிடதம் கூறும் வண்ணம், இச்சீவனானவன் முந்திய ஜந்மத்தை நினைக்கிறான்; அச்சென்ம ஞானமே அவன் செய்த கருமங்களை நினைக்கச்செய்கிறது; அக்கருமங்கள் முன் அச்சீவனடைந்த அனேக ஜன்மங்களையும் நினைக்கச்செய்கின்றது. அச்சீவன் முன் செய்த கருமங்களையும் ஜந்மங்களையும் நினைத்தாலும், ஓர் புறம் உதர நெருப்பும், மற்றோர் புறம் மலமூத்திராதிகளும், வேறோர் புறம்மாம்ஸாதிகளும் சரீரத்தை அசைப்பதற்கு மில்லாமல் இருக்கும் கர்ப்பவாஸ துக்கத்தையும் நினைத்துப்பார்த்து,

" नानायोनिसहस्राणि पुराप्राप्तानिवैमया ।
जातश्चैवमृतश्चैव जन्मवैवपुनःपुनः ॥
अहोदुःखोदधौमग्नो नपश्यामिप्रतिक्रियम् ॥"

என்றபடி இதற்குமுன் அனேக கர்ப்பங்களில் வாஸம் செய்தேன். இறப்பதும் பிறப்பதும் தொழிலாய்க் கொண்டேன். அந்தோ கஷ்டம்! துக்கமென்னுங் கடலிலகப்பட்டுக்கொண்டு முழுகிக் கிடக்கிறேனே! ஏ பரமேசுவரா! இக்கர்ப்ப வாஸத்தினின்றும் என்னை சீக்கிரமாய் வெளிப்படுத்தக் கூடாதா? இனி நான் பாபகருமங்களை செய்யமாட்டுவேனில்லேன். உம்மையே பஜனைசெய்வேன் என்றிவ்விதமாக மனதிலேயே புலம்பிக்கொண்டு அனுபவிக்கும் கஷ்டங்கட்கு ரௌரவாதி நரகங்களும் நிகரில்லை. ஆதலின் ஜனனமரணாதி இப்பெருந் துக்கற்திற்குள்ளாக்காமல் மேற்கூறிய பிணியைக் கருவறுக்கும் ஞானமென்னும் அவுஷதத்துக்கு பரம்பரா சாதனமான வருணாசிரமங்கட்குரிய தருமங்களைச் செய்து அதனால் சித்தசுத்தி வந்தபிறகு ஆத்மவிசாரணை பண்ணும் வழியைக்குறிக்கும் நமது ஆரியமதத்தை ஆராய்ந்து தெரிந்துகொள்ளுங்கள்.

" अस्तिशूद्रस्यशुश्रूषाः पुराणेनैववेदनं ।
वदान्तिकेचिद्विद्वांसस्त्रीणांशूद्रसमानतां ॥
अन्येषामपिसर्वेषां ज्ञानाभ्यासोधिकारिता ।
भाषान्तरेणकालेन तेषांसोप्युपकारकः ॥"

என்று சூதசம்ஹிதையில் கூறுகின்றபடி ஸ்திரீ சூத்திரர்கட்கு புராணத்தினலேயே தத்வ விசாரணஞ் செய்யவேண்டுமென்று விதி யிருந்தாலும், வேதாந்தங்களேயே பாஷாந்தரங்களாலும் அறியலாமென் றிருப்பது பற்றி இதிஹாச புராணங்களாலும், பாஷாந்தர வேதாந்தங்களாலும் ஆரிய மதத்தை யறிந்து கொள்ளுங்கள். புறமதத்தவர்கட்கும் ஆரியமதத்தைப் போதியுங்கள், சுபம்: சுபம்: சுபம்.

முற்றும்.

கணேச ஆரியர்.

---

* இராமர் சீதை இவர்களின் வயோ நிர்ணயம்.

மந்திரங்களிலெல்லாஞ்சிறந்தது காயத்ரி. அதுமேற்பார்வைக்குச் சூரியனேக்குறித்த ஸ்தோத்திரமாகும். ஆழ்ந் தறியுங்கால், ஸ்வயம் பிரகாச பரப்பிம்மத்தின் தியானமேயாகும். அதுபோல் இராமாயணம் காயத்திரி மந்திரத்தின் கருத்தையே விரிவாய்க் கொண்டிருப்பதால் எல்லா நூற்களுக்குஞ் சிறந்ததெனப் பெரியோர் கூறுகிருர்கள். அம்மந்திரத்தினுள்ள 24-அக்ஷரங்களேயும் ஆயிரத்திற் கொவ்வொன்ருக வைத்து 24-ஆயிரம் சுலோகங்களாக அமைக்கப்பெற்றது. காயத்ரி மந்திரம் * ஸப்த வ்யாஹிருதிகளாகப் பிரிக்கப்பட் டிருப்பதுபோல், இராமாயணமும் ஸ்ப்தகாண்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. காயத்ரி மந்திரத்துக்கு ஸ்தூலார்த்தம், சூக்ஷ்மார்த்தமென யிரண்டு அர்த்தங்களிருக்கின்றன. அதுபோலவே இராமாயணத்துக்கும் ஸ்தூலார்த்தம் சூக்ஷ்மார்த்தம் என இரண்டு அர்த்தங்களுண்டு. ஸ்தூலார்த்தப்படி இரவிகுல திலகரான இராமனைப்பற்றிய கதையேயானுலும், தத்வார்த்தத்தை உய்த்துணருங்கால் சச்சிதானந்த ஸ்வயம்பிரகாச பரப்பிரம்ம ஸவரூபத்தையே விளக்குகிற அநேக வேதார்த்தத்தை உள்ளடக்கிக்கொண்டிருக்கும்சிறந்த ஒருவைதீக நூலாயிருக்கிறது. ஆனல் வர்ணுச்ரம தர்மம், ஸ்த்ரீ புருஷதர்மம், பெரியோர்களே வணங்குதல், விருந்தோம்பல், செய்ந்நன்றியறிதல், செங்கோன்முறை, இராஜதந்த்ரங்கள் அமைச்சரினியல்பு, அன்பு, தயை, நடுவு நிலைமை, நன்மைதீமைகளின் பயன் முதலிய மேலான நீதிகளேக் கற்பிக்குஞ் சிறந்த லௌகிக நூலாயுமிருக்கிறது, ஐந்தாவது வேதமாகக் கொண்டாடப்படுகிற மகாபாரத இதிஹாஸத்திற்கு முற்பட்ட நூலாயுமிருக்கிறது. இத்தகைய மகிமையுடன் கூடிய இக்கிரந்தமானது, வான்மீகி மகரிஷியானவர் வருங்காலத்தை யுணர்ந்து சொல்லியதாகையால் விஷயங்

---

* Translated from 'The Ramayana Mahimadarsa.'

* भूः, भवः, सुः, मः, जनः, तपः, सत्यम्ः என்பவைகளே ஸப்தவ்யா ஹ்ருதிகளாம்.

'பனிரெண்டு வயது பாலகுமாரனன இராமன்' என் றேற்படுகிறது. இது முற்கூறியபடி 'இராமன் பதினாறுக்குக் கொஞ்சங்குறைந்த வயதுள்ளவன், என்றதற்கு விரோதமாக விருக்கிறது. இது இரண்டாவது சந்தேகம்.

ஜானகி தேவியார் அநசூயாதேவியைநோக்கித் தனக்கு நிகழ்ந்த திருக்கல்யாண மகோற்சவத்தைபபற்றி சொல்லிக்கொண்டு வருகையில்,

"पतिसंयोगसुलभं वयोदृष्ट्वातुमेपिता ।
चिंतामभ्य गमद्दीनोवित्तनाशादिवाधनः ।।"

"பதியுடன் சுகபோகாதிகளை யனுபவிக்கத்தகுந்த வயதோடு கூடிய என்னைப்பார்த்து என்னுடைய பிதாவான ஜனகமகாராஜாவானவர் தன் பொருளையிழந்த தீனனான ஒரு வரிஞனைப்போல் மிகக் கவலைகொண்டார்;" என்றிருப்பதில் சீதாதேவி விவாகத்துக்கு முந்தியே பதியுடன் சுக போகாதிகளை யனுபவிக்கத் தகுந்த வயதுள்ளவளாக ஏற்படுவதில், முற் கூறிய மாரீசனுடைய வாக்யத்தின்படி, விவாககாலத்தில் பனிரெண்டு வயதுள்ள இராமமூர்த்திக்கு, யுவதியான சீதாதேவியை மணம்புரிவித்த தெங்ஙனம் பொருந்தும், என்று மகத்தான சந்தேகமுண்டாகிறது. இது மூன்றுவது சந்தேகம்.

ஜாநகியின் பருஷமான வார்த்தையைச் சகிக்க மாட்டாதவராய் இளைய பெருமாள், தன் தமையனைத் தேடிச்சென்ற மறுநிமிஷத்தில் தனி த்திருக்கும் சீதையைக்கொண்டு செல்ல கபடச்சன்னியாசி வேஷம்பூண்டு பர்ணசாலைக்குள் வந்த இராவணனுக்கும், தனக்கும் நேர்ந்த சம்பா ஷணையில், பிராட்டியார் இராக்கத ராஜனை நோக்கித் தன் விருத்தாந்தத் தைச் சொல்விவருகையில்,

"उषित्वाद्वादशसमाः इक्ष्वाकूणांनिवेशने ।
भुञ्जानान्मानुषान्भोगान्सर्वकामसमृद्धिनी ।।
ततः त्रयोदशेवर्षे राजामन्त्रयतप्रभुः ।"

* * * * *

"ममभर्तामहातेजा वयसापञ्चविंशकः ।
अष्टादशहिवर्षाणि ममजन्मनिगण्यते ।।"

இக்ஷ்வாகு மகாராஜாக்களுக்கு இருப்பிடமாயுள்ள திருவயோத்தியில் என் பர்த்தாவுடன் சகலமான போகபாக்கியங்களையும் பனிரெண்டு வருஷ பரியந்தம் யாதொரு குறைவுமின்றி யனுபவித்து வருகையில், பதின்மூன் றுவது வருஷத்தில் தயரத சக்கிரவர்த்தியானவர் தன் புதல்வருக்கு முடி சூட்ட மந்த்ராலோசனை செய்தனர்;" என்றும் கைகேயியின் ஏவுதலினுல் வனவாஸஞ்செய்ய நேர்ந்த அக்காலத்தில், "மகா தேஜோவானுன என்னு டைய பர்த்தா இருபத்தைந்து வயதுள்ளவர்; எனக்கோ ஜன்மமுதல்

18-வருஷங்களாயின;" என்றும் சொல்லியிருப்பதில், சக்கிரவர்த்தித் திருக்குமாரரான இராமபிரானும், விதேஹராஜபுத்திரியான பிராட்டியாரும் திருமண முடிந்து பனிரெண்டு சம்வத்சரம் திருவயோத்தியில் வசித்ததாகவும், பதின்மூன்ருவது வருஷத்தில் கானகஞ் சென்றதாகவும் அந்தப்படி கானகங்நோக்கித் திருவயோத்தியை விட்டுப் பிரயாணமானபோது தன் பர்த்தாவுக்கு இருபத்தைந்து வயதென்றும், தனக்குப் பதினெட்டு வயதென்றும் சொல்லப்பட்டிருப்பதையும், முன் அனசூயாதேவியினிடம் மொழியப்பட்டுள்ளதையும் பரியாலோசனை செய்யுமிடத்து திருமணத்திற்கு முன்னதாகவே யுவதியான சீதாப்பிராட்டியாருக்குப் பனிரெண்டு சம்வத்சரம் வரையில் அயோத்தியில் வசித்திருக்கப் பதின்மூன்ருவது சம்வத்ஸரமான வநவாஸப்ரயாண காலத்தில் எப்படி பதினெண் வயதாயிருக்கலாம்? என்று மகத்தான சந்தேக முண்டாகிறது; இது நான்காவது சந்தேகம்.

'இராமபிரான் காட்டுக்குப் போகிருன்' என்ற விருந்தாந்தத்தைக் கேட்ட கௌசல்யாதேவியானவள் அதி துக்கத்துடன் புத்திரனைப் பார்த்துச் சொல்லுகையில்,

"दशसप्तचवर्षाणि तवजातस्यराघव ।
आस्थितानिप्रकांक्षन्त्या मयादुःखपरिक्षयम् ॥"

'இராம! உனக்குப்பதினேழு வருஷங்கள் ஆயின; என்னுடைய துக்கத்தின் அந்தியத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்;' என்றிருக்கிறது. இந்த வசனத்தைப் பரியாலோசிக்கும்போது வநவாஸப்ராரம்ப சமயத்தில் இராகவனுக்குப் பதினேழு வயதென் றேற்படுகிறது. அப்படியானல் பூர்வோக்த பிரகாரமாய்த் தன் கொழுநன் இருபத்தைந்து வயதுள்ளவர் என்று சொன்ன சீதாதேவியின் வாக்கியத்திற்கும், 'பதினேழு வருஷங்கள்' என்று சொன்ன கௌசல்யா தேவியின் வாக்கியத்திற்கும் மிகுந்த விரோதஞ் சம்பவிக்கிறது. இது ஐந்தாவது சந்தேகம்.

இவ்வாறு மேற்கூறியபடி ஐந்து இடங்களிலும் சொல்லப்பட்டிருக்கும் வசனங்களினலே யுண்டாகிற பரஸ்பர வைஷம்யத்தினலே மகத்தான சந்தேகங்கட் காஸ்பதமாக யிருக்கிறது. ஆகலின் வான்மீகி பகவானுடைய மனதிலுள்ள நிச்சயந்தா னென்னேவென் ருலோசிப்பாம்.

(இன்னும் வரும்.)

பெருமாள் திருமொழி.

அங்கணெடுமதிள்

எழுசீர்கழிநெடி லாசிரியவிருத்தம்.

கல்யாணி ராகம் - ஆதிதாளம்.

1. அங்கணெடு மதிள்புடைசூ ழயோத்தியென்னும்
அணிநகரத் துலகனைத்தும் விளக்குஞ்சோதி
வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த்தோன்றி
விண்முழுது முய்யக்கொண்ட வீரன்றன்னைச்
செங்கணெடுங் கருமுகிலை யிராமன்றன்னைத்
தில்லைநகர் திருச்சித்ர கூடந்தன்னுள்
எங்கள்தனி முதல்வனையெம் பெருமான்றன்னை
யென்றுகொலோ கண்குளிரக் காணுநாளே.

[அங்கணெடுமதிள் - அழகிய இடத்தினையுடைய பெரியமதில்கள், புடைசூழ் அயோத்தியென்னும் - நாற்பக்கத்திலு முசூழ்ந்த அயோத்தியென்று சொல்லப்படுகிற, அணிநகரத்து - அழகியபட்டணத்தில், உலகனைத்தும் விளக்குஞ்சோதி- பூமிமுழுதும் பிரகாசப்படுத்துகிற ஒளியினையும், வெம் கதிரோன் குலத்துக்கு - வெப்பமான கிரணத்தையுடைய சூரியவம்சத்துக்கு, ஓர்விளக்காய்த்தோன்றி - ஒரு தீபமாக அவதரித்து, விண்முழுதும் - வானுலகத்திலுள்ள தேவர்களை யெல்லாம், உய்யக்கொண்ட - (அபயாஸ்தந்தந்து) காத்தருளிய, செங்கண் நெடுங்கருமுகிலை - செந்தாமரைமலர்போன்ற கண்களையுடைய நீண்ட கரியமேகம் போன்றவனை, இராமன்றன்னை - இராமனென்னும் பெயருடையவனை, தில்லைநகர் திருசித்திரகூடந் தன்னுள் - தில்லைநகரத்துள்ள திருச்சித்திரகூடமென்னுந் திவ்வியதேசத்தில் எழுந்தருளிய, எங்கள்தனிமுதல்வனை - எங்களுடைய ஒப்பற்ற ஆதிமூர்த்தியை, எம்பெருமான்றன்னை - எங்களுக்குப் பெரியோனாக இருப்பவனை, கண்குளிரக் காணுநாள் - கண்ணூறச் சேவிக்குந்தினம், என்றுகொலோ எந்நாளோ (அறியேன்)]

2. வந்தெதிர்ந்த தாடகைத னுரத்தைக்கீறி
வருகுருதி பொழிதரவன் கணையொன்றேவி
மந்திரங்கொள் மறைமுனிவன் வேள்விகாத்து
வல்லரக்க ருயிருண்ட மைந்தன்காண்மின்
செந்தளிர்வாய் மலர்நகைசேர் செழுந்தண்சோலைத்
தில்லைநகர் திருச்சித்ர கூடந்தன்னுள்
அந்தணர்க ளொருமூவா யிரவரேத்த
அணிமணியா சனத்திருந்த வம்மான்றானே.

[செந்தளிர்வாய் - சிவந்ததுளிர்களுக்கிடையில், மலர்நகைசேர் - மலர்களின் ஒளிபொருந்திய, செழுந் தண்சோலை - செழிப்பான குளிர்ந்த நந்தவனங்களையுடைய தில்லைநகர் திருசித்திர கூடந்தன்னுள் - தில்லைநகரத்துள்ள திருச்சித்திர கூட

மென்னும் திவ்வியதேசத்தில் எழுந்தருளிய, அந்தணர்களொரு மூவாயிரவரேத்த- தில்லை மூவாயிரவர்களென்னும் பிராமணச்சிரேட்டர்கள் சேவிக்கும்படி, அணிமணி யாசனத்திருந்த அம்மான் - அழகிய ரத்தினசனத்தில் வீற்றிருந்த அந்தபெரி யோனை, வந்தெதிர்த்த - விசுவாமித்திர முனிவர்யாகத்தில் வந்து எதிர்த்த, தாட கை தன்னுரத்தை - தாடகையென்னும் அரக்கியினது மார்பை, கீறி வருகுருதி பொ ழிதர - பிளந்துவருகின்ற இரத்தமொழுகும்படி, வன்கணையொன்றேவி - ஒரு வலியபாணத்தைப் பிரயோகித்து, மந்திரங்கொள் மறைமுனிவன் - மந்திரரூப மான வேதங்களையுணர்ந்த கௌசிகமுனிவனது, வேள்விகாத்து - யாகத்தை வி விக்கினமாய்க்காப்பாற்றி முடிப்பித்து, வல்லரக்கருயிருண்ட - வலிய அரக்கர்களு டைய உயிரைமாய்த்த, மைந்தன்காண்மின் - வல்லமையை யுடையவனென் றறி யுங்கள்.

3. செவ்வரிநற் கருநெடுங்கண் சீதைக்காகிச்
சினவிடையோன் சிலையிறுத்து மழுவாளேந்தி
வெவ்வரிநற் சிலைவாங்கி வென்றிகொண்டு
வேல்வேந்தர் பகைதடிந்த வீரன்றன்னை
தெவ்வரஞ்ச நெடும்புரிசை யுயர்ந்த * பாங்கர்த்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந்தன்னுள்
எவ்வரிவெஞ் சிலைத்தடக்கை யிராமன்றன்னை
யிறைஞ்சுவா ரிணையடியே யிறைஞ்சினேனே.

[செவ்வரிநற் கருநெடுங்கண் - சிவந்தரேகை பரந்த நல்ல கருமையான நீண்ட கண்களையுடைய, சீதைக்காகி - சீதாதேவியின்பொருட்டு, சினவிடையோன் சிலை யிறுத்து - கோபம்பொருந்திய ரிஷபவாகனத்தையுடைய சிவனது வில்லைமுறித் து, மழுவாளேந்தி - பரசு - வாள் - என்னுமாயுதங்கள்தரித்த பரசுராமனது, வெவ் வரிநல் சிலைவாங்கி - கொடுமையுள்ள நீண்ட நன்மைபொருந்திய வில்லைவாங்கி (பாணப்பிரயோகம் பண்ணி) வென்றிகொண்டு - (அவனை) ஜெயித்து, வேல்வேந் தர் பகைதடிந்த வீரன்றன்னை - வேலாயுதத்தைத்தரித்த சூரியவம்சத்தரசர்களது பகமைக்கெடுத்த பராக்கிரமமுடையவனை, தெவ்வரஞ்ச - சத்துருக்கள் பயப்படும் படி, நெடும்புரிசை யுயர்ந்த பாங்கர் - நீண்டமதில்க ளுயர்ந்திருக்கின்ற பக்கங்களை யுடைய, தில்லைநகர்த் திருச்சித்திரகூடந்தன்னுள் - தில்லையென்னும் திருபாதியி லுள்ள அழகிய சித்திரகூடமென்னும் திவ்யதேசத்திலிருக்கிற, எவ்வரிவெஞ்சி லைத் தடக்கை யிராமன்றன்னை - பாணத்துடன் விளங்குகின்ற கொடுமையான நீண் டவில்லேந்திய பெரியகையினையுடைய ஸ்ரீராமபிரானை, இறைஞ்சுவர் திருவடியே வணங்குகின்ற தாசர்களது திருவடிகளை, இறைஞ்சினேன் - வணங்கினேன்.]

4. தொத்தலர்பூஞ் சுரிகுழல்கை கேசிசொல்லால்
தொன்னகரந் துறந்துதுறைக் கங்கைதன்னை
பத்தியுடைக் குகன்கடத்த வனம்போய்ப்புக்குப்
பரதனுக்குப் பாதுகமு மரசுமீந்து

*பாங்கர் - அட்டாலை; மேல்தளம், தூர்க்கசவரணை.

சித்திரகூடத் திருந்தான் றன்னையின்று
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந்தன்னுள்
எத்தனையுங் கண்குளிரக் காணப்பெற்ற
இருநிலத்தார்க் கிமையவர்நே ரொவ்வார்தாமே.

[தொரத்தார் பூஞ்சுரி குழர்கைகேசி - பூங்கொத்துக்கள் நிரம்பிய நெளிய கூந்தலையுடைய கைகேசியம்மையினது, சொல்லால் - ஆக்ஞையினால், தொன்னகரந் துறந்து - பழமையான அயோத்தியா நகரத்தைவிட்டு, துறக்கங்கைதன்னை - படித்துறைகளையுடைய கங்காநதியை, பத்தியுடை குகன்கடத்த - தாசத்துவமுடைய குகன் (ஓடத்தைக்கொண்டு) தாண்டுவிக்க, வனம்போய்புக்கு - காட்டுக்குள்ளே போய்புகுந்து, பரதனுக்கு - பரதாழ்வானுக்கு, அப்பாதுகையும் அரசுமீந்து-(தன்னுடைய) திருவடிநிலையையும் இராஜ்யத்தையும் கொடுத்து, சித்திரகூடத்திருந்தான்றன்னை - சித்திரகூடபர்வதத்தில் எழுந்தருளிய சக்கிரவர்த்தித் திருமகனாரை இன்று - இந்நாள், தில்லைநகர் திருச்சித்திர கூடந்தன்னுள் - தில்லையின்கண்ணுள்ள அழகிய சித்திரகூடமென்னும் திவ்யதேசத்தில், எத்தனையுங் கண்குளிரக் காணப்பெற்ற - எவ்வளவாயினும் தமதுகண்கள் களிகூரும்படி சேவைசெய்த இருநிலத்தார்க்கு - பெரிய பூவுலகத்துள்ள மனிதர்களுக்கு, இமையவர் நேரொவ்வார்தாமே - தேவர்கள் சமமாகார்கள்.]

5. வலிவணக்கு வரைநெடுந்தோள் விராதைக்கொன்று
வண்டமிழ்மா முனிகொடுத்த வரிவில்வாங்கி
கலைவணக்கு நோக்கரக்கி மூக்கைநீக்கக்
கரனோடு தூஷணன்ற னுயிரைவாங்கி
சிலைவணக்கி மான்மறிய வெய்தான்றன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்திர கூடந்தன்னுள்
தலைவணங்கி கைகூப்பி யேத்தவல்லார்
திரிதலால் தவமுடைத்துத் தரணிதானே.

[வலி வணக்கு வரை நெடுந்தோள் விராதைக்கொன்று - பலத்தை தனக்குள் ளடக்கிக்கொண் டிருக்கிற பர்வதாகாரமான நீண்டதோள்களையுடைய விராதனென்னுமரக்கனைமாய்த்து, வண்டமிழ்மாமுனி கொடுத்த வரிவில்வாங்கி=இனிமையான தமிழாசிரியனாகிய அகஸ்திய முனிவனாற் றரப்பட்ட நெடிய வில்லைப் பெற்றுக்கொண்டு, கலைவணக்கு நோக்கரக்கி மூக்கைநீக்கி=கலைமானைத் தோல்வியடையப் பண்ணுகிற பார்வையினையுடைய சூர்ப்பனகையின் மூக்கைக்கொய்து, கரனோடு தூடணன்றன்னுயிரை வாங்கி=கரதூஷணத் திரிசிரனென்னு மரக்கர்களை வதைத்து, சிலைவணக்கி மான்மறிய வெய்தான்றன்னை=மாரீசனென்னும் மாயமான் சாகும்படி வில்வளைத்து பாணப்பிரயோகம் பண்ணின ஸ்ரீராமனை, தில்லைநகர் திருச்சித்திர கூடந்தன்னுள்=தில்லையின்கணுள்ள அழகிய சித்திரகூடமென்னுந் திவ்யதேசத்தில், தலைவணங்கிக் கைகூப்பி யேத்தவல்லார் - தலையினால் நமஸ்கரித்து கையினால் அஞ்சலிசெய்து வாயினாற்றுதிக்கும் தாசபூதர்கள் (பாதந்தோய நடந்து), திரிதலால் தவமுடைத்து இத்தரணிதானே-திரிவதினால் இப்பூமியானது புண்ணியமுடையதாகச் சொல்லப்படுகிறது.]

(இன்னும் வரும்.)

பக்ஷபாதமும் பிராத்ரு துரோகமும்

அல்லது

பிறமாதர் நட்பினுலுண்டாகும் நிந்தை.

*   *   *   *   *   *

இது நிற்க, உயர்ந்த மேனிலையையுடைய மாளிகை தோன்றிற்று. அதன் இருபுறத்திலும் நெருங்கியுள்ள வீடுகளின் காக்ஷியானது ஓரிறை மகனுக் கிருபாலுந் தங்கியிருந்த அவனது பரிவாரங்களைப் போன்றிருந் தது. அம்மாளிகையின் சுற்றுப்புறமெங்கும் சுதை வேலைகளால் அலங் கரிக்கப்பட்டு முகப்பில் மெருகுவைத்த கருங்கற் குறட்டினுல் அமைத்த திண்ணைகளுடன் விளங்குவதைத் தூரத்திலிருந்து பார்ப்பவர்கட்கு, அம் மாளிகையினடியில் கருமையாகத் தோன்றுகிற பாகமும், அதன் மேற் புறத்தில் சுண்ணும்பு பூசுதலால் வெண்மையாகத் தோன்றுகிற பாகமும், விஷ்ணுமூர்த்தியின் திருக்கரமும் அதிற் றரிக்கப்பட்டிருக்கின்ற சங்க முமோ வென்று கருதும்படி தோன்றும். அவ்விரு திண்ணைகளுக்கு நடுவில் பவளத்திறுற் செய்துவைத்தாற்போல் ஹம்ஸம், தாமரஸம், பூங் கொடி இவைகளைச் சித்திரித்து ஜாதிலிங்கச் சிவப்புவருணம்பூசி விளங்கு கின்ற நிலைகளும், அதற் கிருபாலும் உட்புறத்தில் வைத்துள்ள பொன்மய மான தாமரை மொட்டுப்போன்ற குமிழ்களுடன் வைக்கப்பட்டிருக்கிற புதவங்களும் உள்ள நுழைவாயிலிருந்தது. அவ்வாயிலுக்கு மேற்புறத்தில் பத்மாஸனத்தில் வீற்றிருக்கின்ற கஜலக்ஷ்மியின் திருவுருவ மமைக்கப்பட் டிருப்பது அத்திருமாதின் சபாமண்டபம்போல அவ்வாயில் பார்ப்பவர்க ளுக்குப் பிரஸன்னமாய்த் தோன்றிற்று. அம்முகத்துவாரமும் அதிலி ருந்து கீழிறங்கி வருவதற்கு கட்டப்பட்டிருக்கின்ற படிக்கட்டுகளும், வாயின் உட்புறத்தில் ஓர் பக்கத்தில் மேல் மாடியில் சென்று பயில்வதற் காக கட்டப்பட்டிருக்கிற சோபான வரிசைகளும், அவைகளில் போக்கு வரத்து செய்கின்ற வஸ்திராபரணங்களாற் பொலிவுபெற்ற மங்கையர், மைந் தர், சிறுவர், சிறுமிகளென்னும் பகுப்புள்ளவர்களுமாய்த் தோன்றுவது கந்தர்வ நகரத்தையும், அதில் பயிலும் அந்நகரவாஸிகளையும் ஒத்திருந் தது. அவ்வீட்டுத் திண்ணைகளின் அடிப்புறத்தில் வைக்கப்பட்டிருக்கிற கரும் பொன்னிறுற் செய்யப்பட்ட கூண்டுகளில் ஜவ்வாது பூனை, புழுகு பூனை, கஸ்தூரி மிருகங்கள் பயில்வதனுல் அவைகளிலிருந்து வீசும் நறு மணம் அந்த வழியாகச் சஞ்சரிப்பவர்கள்மேல் படிவதனுல் பின்னது மாறுவதற்கு ஒரு மாதஞ் செல்லுமெனின், எப்பொழுது மங்கனம் பயில் பவர்கள் மனிதருபங்கொண்ட அம்மிருகங்களைப் போலவே தோற்றுவார் கள்,

அவ்வீட்டிற்குள் புகுந்து பார்க்குங்கால் பாடகசாலை, சாமானறைகள், நெற்களஞ்சியங்கள், பாகசாலை, மஞ்சனச்சாலை, அந்தப்புறம், பொக்கிஷசாலை, மாட்டுக்கொட்டில், குதிரைலாய முதலியவைகள் காணப்படுதலால், அவைகள், அந்நகரமேயோர் ஹம்ஸ சிரேஷ்டம் போலவும், அம்மாளிகை யதன் கர்ப்பத்திலிருக்கின்ற முட்டைபோலவும், அம்முட்டையினுள்ளிருக்கின்ற குஞ்சின் அவயவப் பகுப்புப் போலவுங் காணப்பட்டது.

பின்பு மேனிலைக்குச் செல்லும் வழிக்கருகில் சென்று பார்த்தால் ஐந்துவிதமான நிறமுள்ள கற்களில் ஒன்றன்மேலொன்றாய் மாறிமாறிச் சுற்றிச் சுற்றி மேலே ஏறும் படி கட்டப்பட்டிருந்தது. அம்மார்க்கமானது பல நிறமுள்ள கற்களி னொளியையும் அதன் வழியாய்ப் பயிலுஞ் சனங்களையும் நோக்கினால், ஏழுவகை நிறமுள்ள சூரிய மண்டலத்தைப் பேதித்து வீர சுவர்க்கத்திற்குச் செல்லும் சனங்களைப்போற் காணப்பட்டார்கள். அவ்வழியாய்ச் சென்று மேனிலையை யடைந்து பார்க்கும்போது திருப்பாற்கடலின் தோற்றம்போல் பெரிய மாளிகையொன்று (Hall) காணப்பட்டது. அம்மாளிகையில் விதம்விதமான கண்ணாடி விளக்குகளும், குத்து விளக்குகளும், பிரகாசித்துக்கொண் டிருந்தவைகள், அப்பாற்கடலின் மத்தியில் தங்கிய சேஷனது பணாமணிகளைப்போல கிரணங்களை யுமிழ்ந்தன. சுற்றுப்புறங்களில் உள்ள சுவர்களில் நிலைக் கண்ணாடிகளும், அதன் மேற்புறத்தில் வரிசையாக வைக்கப்பட்ட சித்திரப் படங்களுமிருந்தன. கீழ் நிலத்தில் சதிர்ச் சமக்காளம் உயர்ந்த இரத்நக்கம்பளம் விரிக்கப்பட்டு அதன்மேல் நாற்காலி முதலிய திவ்வியாஸனங்க ளணியணியாய்ப் போடப்பட்டிருந்தன. நடுவில் போடப்பட்டிருந்த வெள்ளித் தகட்டாற் பொதிந்த கால்களையும், விளிம்பில் சுவர்ணத்தகடுகளழுத்தி அதன் கீழ்த் தொங்கும்படிச் செம்பட்டுச் சாலர்களும், மணிக்கோவைகளும் கட்டி, நடுவில் யானைத் தந்தப் பலகையை யிணக்கிச் செய்துள்ள மேஜையின்மேல் இருபுறத்திலும் வெள்ளியினாற் செய்துள்ள செடிகளில் பொன் மலரமைத்த ஊதுவத்திச் செடிகளும், அதற்கடுத்த இருபுறத்திலும் பொன்னினாற் செய்த பன்னீர்ச் செம்புகளும், சந்தனக் கிண்ணங்களும், இதன் மத்தியில் ஆகாயகங்கையில் மலர்ந்த பொற்றாமரை மலர்போன்ற சுவர்ணத் தட்டத்தில் மரகதத் தகடுபோன்ற மெல்லிலைத் தளிர்களும், துவர்க்காய்ப் பிளவுகளும், முகவாஸ திரவியக் குப்பல்களும் அதன்மேல் ரோஜா மலரால் குச்சுகட்டிய ஜாதிப்பூ ஹாரங்களும் வைக்கப்பட் டிருந்தன. அந்த மேஜையின்மேல் புஷ்பச் செண்டுகளும், எலுமிச்சம் பழங்களும் வைக்கப்பட்டிருந்தவைகள், அப் பாற்கடலில் வஸிக்கும் மலர் மகளும், மலைமகளும் விளையாடுகின்ற பந்து, கழங்கு, அம்மனைகளை ஒத்திருந்தன.

ஸ்ரீராமர் பட்டாபிஷேகம், மீனாக்ஷி கல்யாணம், கிருஷ்ணலீலை முதலிய தேவாமிசமான படங்களுக்குச் சாத்தப்பட்டிருந்த மல்லிகா புஷ்பமாலைகளின் வாஸனை மிக்கு எங்கும் பரவியது. அம்மாளிகையுள் ஓர் புறத்தில் வைக்கப்பட்டிருந்த, வாயிலுக்குள் போய்ப் பார்த்ததில் சந்திரிகையினால் தவழப்பட்ட முற்றமானது வெள்ளித்தகடு படுத்ததுபோல் தாவள்யமாய்ப் பிரகாசித்தது. அதிலோர் பக்கத்தில் சந்திர பிம்பங்களைப்போல் விளங்குகிற வெள்ளிப் பாத்திரங்களில் வைக்கப்பட்டிருந்த கறிகள், பக்ஷணங்கள், சித்திரான்னங்கள் இவைகளின் வாஸனையினால் ஜனங்கள், அமிருதத்திற்காக பாற்கடலை மொய்த்திருந்த தேவக் கூட்டம் போல் சூழப்பட்டார்கள்,

அப்பொழு தங்கிலா முற்றத்தில் ஒரு ஆடவனும், ஒரு மங்கையும் தங்களுக்குள் பேசத்தொடங்கினார்கள். "அத்தான் குட்டி ! இலையில் பரிமாற வேண்டிய எல்லா பதார்த்தங்களையும் எடுப்பித்துக்கொண்டு வந்து இதோ இங்கு சித்தப்படுத்தியிருக்கிறேன் ; இலை போடலாம் ; இன்னும் யார் வரவேண்டும் ? அதிகாழிகைசென்றால் பதார்த்தங்களில் உஷ்ணமாறி ருசி கெட்டுப்போகுமே !" என, " அடியம்மா, லக்ஷ்மி ! எல்லாரும் வந்துவிட்டார்கள் ; உன்னண்ணாவுஞ் சாயருந்தா னின்னும் வரவில்லை. அதற்காகத் தான் பார்த்துக்கொண் டிருக்கிறேன். இலை போடவேண்டியதுதான்" என்று ஸ்ரீநிவாஸன் சொல்லும் போது ஒருவன்வந்து, "சாயரும். நாகூர் சப்மாஜிஸ்திரேட்டும் வந்துவிட்டார்கள்" என்று சொன்னான். "ஆனால் சரி, லக்ஷ்மி ! பரிசாரகர்களை இலைபோட்டுப் பரிமாறச்சொல் ; நானெல்லாரையு மிட்டுகொண்டு வருகிறேன் : பெண்டுகளுக்கும் அந்தப் பக்கத்தில் பரிமாறும்படி ஏற்பாடு செய் ;" என்று சொல்லி ஸ்ரீநிவாஸன் கீழிறங்கிப் போய் வாசலில் நின்று பார்க்கையில், இரயிலடிக் கனுப்பியிருந்த தன்னுடைய பீடன் வந்து நிற்கக் கண்டபோது அதிலிருந்து 'சாயர்' இராஜரத்னமையரும், நாராயணய்யரும் இறங்கினார்கள். உடனே பொட்டி வண்டி ஒன்று வந்து நின்றது. அதினின்றும் சுமார் இருபத்தைந்து வயதிருக்கலாம் ஒரு பெண்மணி இறங்கினாள். ஓர் பில்லைச்சேவகன் 5 - 6, வயதுள்ள ஓர் பெண்குழந்தையைக் கீழேயிறக்கிவிட்டு அதிலிருந்த ஸ்டீல் ட்ரங்கு பெட்டியைத் தூக்கிக்கொண்டு வீட்டிற்குள்ளே போனான். அப்பொழுது லக்ஷ்மி திடீரென்று வந்து, " மன்னி ! வந்தாயா, இத்தருவாயென்ன?" வென்று புன்சிரிப்புடன் உபசரித்துக் குழந்தையைத்தான் வாங்கிக்கொண்டு உள்ளே யழைத்துச்சென்றாள். ஸ்ரீநிவாஸன் அவ்விருவரது நல்வரவை விசாரித்து அழைத்துக்கொண்டு உள்ளேபுகும்போது, திண்ணையில் வைக்கப்பட்டிருந்த சொம்புகளிலுள்ள ஜலத்தை யெடுத்து மூவருமாய் கைகால் சுத்திசெய்துகொண்டு உள்ளே புகுந்தார்கள்.

அதற்குள் லக்ஷ்மி, முற்றத்திற்கு அருகிலுள்ள தாழ்வாரத்தில் மூவருக்கு மாஸனங்கள் போட்டு வெள்ளிப்பஞ்சபாத்திரத்தில் தீர்த்தமும் உத்தரணியும் விபூதியுங் கொண்டுவந்து வைத்துவிட்டு, தன் அண்ணன் வருகையை விசாரிக்கு மாவலுடன், கதவின் மறைவில் நின்றுகொண்டிருக்கையில், முன்னால் ஸ்ரீநிவாஸனும், நடுவில் நாராயணனும், கடைசியாக சாயரும் வரக்கண்டு கதவினருகில் தன் அண்ணா வரும்பொழுது, "வா அண்ணா, ஏனித் தருவாய்" என்று மெல்லிய குரலால் தன்றமையன் காதில்மாத்திரம் படும்படி அத்தமையனோடுபேசவேண்டுமென்னும் ஆசையானது பாதிவார்த்தையை வெளியில் தள்ளவும், பின்னால் 'சாயர்' வருகின்றாரே எப்படி பேசுவது என்னு நாணமானது பாதிவார்த்தையை உள்ளேயிழுத்துக்கொள்ளவும் சொல்லிவிட்டு மின்னற்கொடிபோல் மறைந்து போயினள்.

(இன்னும் வரும்.)

இராஜமும் தங்கமும்.

ஒரு சிறுகதை.

அஃதோர் அழகிய கிராமம். நாம் இச்சிறுகதையை எழுதுஞ்சமயம் அந்திப்பொழுது. மஞ்சள்நிறமும் விநோதமுமான கிரணங்களினால் தினகரன், வீட்டுச் சாளரவாயில்களில் பிரகாசித்தனன். எங்குநோக்கினும் மஞ்சள்நிறமுள்ள வெயிலானது உருகியோட விட்ட பொன்னீர்போல்வ தகத்தகாயமாய் விளங்கிற்று. வரவர சூரிய வொளிகுன்றியது. திவாகரன் மேற்குத்திசையில் அஸ்தகிரிவழியே பாதாளஞ்சென்றனன். மாடுகள் வயிறுநிறையப் புல்லுகளைமேய்ந்து அதனதன்கழுத்தில் கட்டியிருக்கும் மணிகள் கணகணவென்றொலிக்க வீடுகட்குச் சென்றுகொண்டிருந்தன. சிறுசிறுபிள்ளைகள் ஓலைச்சுவடிகள் நிறைந்த தூக்குப்பலகைகளை தத்தம்கைகளிற் றூக்கிக்கொண்டு இல்லஞ்சென்றுக்கொண் டிருந்தனர். தாமரையின் சோபை விதனமுற்றோன் கல்வியைப்போல் குறைந்தது. காகங்கள் காகாவென்று கத்தி தத்தங் கூடுகள் வந்தடைந்தன. அற்பவரசனைப்போல் உலகமந்தகாரத்தினால் பீடிக்கப்பட்டது. க்ருபணனிடத்துள்ள தனத்தைப்போல் நம்முடையகண்கள் பயனற்றனவாயின.

அங்கோர்வீட்டுத் திண்ணையில் வெள்ளைவெளேர் என்று முட்டாக்கிட்டு ஆடையுடுத்தியும், விபூதியைக்குழைத்து பட்டைபட்டையாய் தாரணஞ்செய்துக் கொண்டும், வெள்ளிக்கம்பியில் கோர்த்த சன்னருத்ராக்கமாலையைக் கழுத்திலணிந்தும் கையில் ஓர் பட்டுக்கயிறு வைத்து தன்கட்டைவிரலிற் சுற்றிக்கொண்டே ஏதோ முணமுணத்துக்கொண்டு ஓர்விதந்து நின்றுக்கொண்டிருந்தனள். சற்று உள்ளே அதாவது வாயிற்படிதாண்டி உள்நடையில் பொற்கொடிபோன்ற ஓர்பெண்மணியானவள் அங்குபிரகாசித்துக் கொண்டிருக்கும் ஓர்மண்ணெண்ணை விளக்கண்டையில் உட்கார்ந்துகொண்டு ஏதோ ஓர்புத்தகத்தைவைத்து வாசித்துக்கொண்டிருந்தனள். அப்பாலிகாமணி யுடுத்தியிருந்த ஆடையையும், பூண்டிருந்த வாபர

ணங்களேயும் நோக்குங்கால் அவர்களுடைய ஏழ்மையைச் சுல்பமா யாவருமறிந்து கொள்ளக்கூடியதா யிருந்தது. இன்னுமந்தப்பெண்ணே உய்த்துநோக்குகையில், ஸ்திரீகட்கு அவசியமிருக்கவேண்டிய மனம், வாக்குக்காயமென்றுகூறும் த்ருகரணங்களேயும் குற்றமானவழிகளிற் செலுத்தாமல் பழிபாவத்துக்கஞ்சி நடக்கு முக்கியமானதாய்க் குணமாகிய அடக்கமென்னுஞ் சிறந்தகுணத்தைக் கைப்பிடித் தவளென அறிவித்தது.

> "காக்க பொருளா வடக்கத்தை ஆக்கம்
> ஆதனி னூங்கில்லே உயிர்க்கு"

என்றபடி, பெண்கள் அடக்கமென்பதைப் பொருளாகமதித்துக் காத்தல்வேண்டும். ஏனெனில், அவர்கட்கு அதைவிட வேறுசெல்வங்கிடையாது. நிற்க.

அப்பொழுது எதிர்த்த வீட்டிலிருந்து வேறு ஒரு அம்மாள்வந்தனள். சாணகலக்கறை போட்டச் செகப்புக் கொர்னுட்டுப்புடவையை முட்டாக்கிட்டு அழகாய்க் கொசாம்வைத் துடுத்தியும், கட்டுகெட்டாய் விபூதிபூசியும், கழுத்தில் ருத்திராக்கமாலேயணிந்தும் உள்ளமாநிறமுமான ஓர் இளங்கைம்பெண். அவள்மேற்சொன்னவீட்டுத் திண்ணையில் குந்தியிருந்த மாதின் பக்கலமர்ந்தனள். அவ்விருவருக்கும் ஓர்விதச்சம்பாஷணை நடந்தது.அதைச் சற்று கவனிப்பாம்.

" ஏண்டி பார்வதி! உண் பொண்ணுக்குக் கல்லியாணஞ் செய்யவேண்டாமோ. வயது பத்துப்பதினென்றிருக்குமே;" என்று வந்தமாது கேட்கப், **பார்வதியம்மாள்** "அடி சாலாட்சி! (விசாலாட்சி யென்பது சரியான பெயர்) உன் பெண் இராஜம்மாளுக்கு வயதாகவில்லேயோ ? பனிரெண்டுக்கு மேலிருக்குமே. நீயே கல்யாணம் பண்ணவில்லேயாம். எங்கள் குட்டி தங்கம்மாளுக்கு இப்போதென்ன அவசரம்?" என்ருள்.

விசாலாட்சி :—"நான் யத்நஞ் செய்யாமலா யிருக்கிறேன். இராஜத்துக்கு நிதம் சிற்றுடையுடுத்தி விதம் வி தமான ரவிக்கைப்போடுவித்து, என்னுலான மட்டில் நல்ல நல்ல நகைகளேப் பூட்டிப் பள்ளிக்குச் செல்லவிட்டும், மற்ற நேரங்களில் வீட்டு வாயில் திண்ணையில் புஸ்தகமுங் கையுமாய் இருக்கச்செய்திருக்கிறேன். இதைவிட என்னம்மா செய்கிறது ?"

பார்வதி :—(அவள் வார்த்தைக்குக் கொஞ்சஞ்சிரித்து) " இப்படி யெல்லாம் செய்தால் பெண்ணுக்குக் கல்யாணமாய் விடுமா அடி ?"

விசாலாட்சி :—" ஏன் ? ஆகாமலென்ன ?"

பார்வதி :—" அதென்னமா ஆகும்? எனக்குக் கொஞ்சஞ் சொல்லேன்."

விசாலாட்சி :—"நம்மிடத்தில் பொண்ணிருக்குன்னு எப்படி தெரியும்? அதுக்காகத் தான் அவளே யடிக்கடி வெளியே போகும்படிக்கும், தன்னிஷ்டப்படி புருஷனேப்பார்த்துத் தேடும்படிக்கும் விட்டிருக்கேன் ; நம்ம இராஜந்தான் சொல்லவேவேண்டாம். வெற்றிலே போட்டத் தன்பவளம் போன்ற உதடுகளில் மந்தகாஸந்தவழவும், பாதசரங்கள் கலீர் கலீர் என்று சப்திக்கவும், மெட்டிகள் ஓசைப்படவும், இடுப்பை யசைத்தசைத்து, என்னவோ நடை என்னுவாளே அன்னம்போலே நடையாமே, அப்படி நடந்தும், யாரைக்காணினுங் கொஞ்சிக்கொஞ்சிப் பேசவும் கற்றிருக்காளோன்னே ? ஞேக்குத்தெரியாதது போலே கேட்க வந்தாட்டையோ?"

பார்வதி:—“ ஏண்டி சாலம் ! அன்ன நடையென்றாயே, அதென்ன ?”

விசாலாட்சி :— “ அன்னநடை யென்னு சொல்லுவாள். அதுதானம்மா நானறிவேன்.”

பார்வதி :—“ இராஜம்மாள் அலங்காரத்தில் பிரியை தான். அவள் நடையே வெகு விசித்திரமாகத்தா னிருக்கிறது.”

விசாலாட்சி:—“ எப்படியாவது அவள் இஷ்டம்போல் நல்ல ஆம்படையானைத் தேடிக்கொண்டால், என் கையாலான மட்டும சக்தியானுசாரம் கல்யாணம் பண்ணிப்போடுகிறேன்.”

பார்வதி :—“ ஏண்டி ! ஆனால் இராஜத்தின் நடத்தை யுனக்குஞ் சம்மதம் போலும்.”

விசாலாட்சி :—“ சம்மதப்படாமல் என்ன செய்கிறது? நல்ல ஆம்படையான் (அகமுடையான்) தான் எப்படி கிடைப்பன் ? வெள்ளைக்காரர்களுக்குள் பெண்கள் சுவயேச்சையாய்த் திரிந்துத் தமக்கிஷ்டமானபடி தான் ஆம்படையானைத் தேடி வாழ்க்கைப்படுகிறதாம். நானே சம்மதப்பட்டுத் தான் அவளையப்படி வீதியில் போகவர சுவயேச்சையாய் விட்டிருக்கிறேன். நீயடக்கமாய் வச்சிக்கொண்டிருக்கையே தங்கம்மாளை, நல்ல மாப்பிள்ளையாய்க் கிடைக்கப்போறானே, நானும் பார்க்கப்போறேனே.”

பார்வதி :—(அவளுடைய வார்த்தைகட்கு நகைத்து, வீணில் ஒரு பெண் கெடுகிறாளே என்ற மனவருத்தத்துடன்) “ ஏண்டி ! நாமிருக்கிற வழியிலிருந்தால், கல்யாண காலமுங் கூடிற்றாயின் தனக்குத்தானே நடக்கிறது. உன்யத்தனமும் என் யத்தனமுமெதற்கு? மாங்கல்யதாரண காலம் வரின் சிற்கு மோடி, விசாலம் ! அதற்காக இப்படியும் பெண்ணை வீதியில் கண்டபடி திரியவிடுகிறதுண்டோ ? ‘விளையும் பயிர் முளையிலே’ என்று சொல்லுவதுண்டு ; அம்மாதிரி என்றிருந்தாலும் அயல் வீட்டில்போய் வாழும் பெண்களை அடக்கிக் கொண்டுவராமல் நீ செய்யுங் காரியம் பழிப்புக்கிடமென் றெண்ணுகிறேன். பெண்கள் பாலிய முதற்கொண்டே நல்வழியிற் பயின்று வரல்வேண்டும் ; கீழ்ப்படிதல், உண்மை, அடக்க முதலிய நற்குணங்களுடன் கூடிய பெண்களுடன் சேர்ந்து அவர்களுடைய நன்னடக்கைகளைத் தாமும் அப்பியசித்து வரல்வேண்டும். அஃதன்றி நீ சொல்லும் வண்ணம் துர்வழக்கங்களை உன் பெண் அப்பியசித்து வருவாளானல் “ தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்,” என்ற பழமொழிப்படி, பிற்காலத்தில் அவைகள் சகிக்கக்கூடாத கெடுதிகளை வுண்டாக்கி என்ன முயன்றாலும் அந்த துர்வழக்கங்கள் நீங்காமல் உயிருள்ளனவுந் தீராத்துக்கங்களையே யனுபவிக்கச் செய்யும். ஏதோ சொன்னேன். யோசித்துக்கொள்.”

விசாலாட்சி :—“ நீ தான் ஞானியைப்போல் பேசுவாயே. உன்பேச்சைக் கேட்டுக் கேட்டுத்தான் என் பொண் கல்யாண மாகாமல் நிற்கிறது. உன்பொண்ணை யாராவது வந்து கேட்கிராளோ ? அல்லது சட்டையாவது செய்கிறாளோ ? என் இராஜக்குட்டிக்கு நான் நீ, என்று வந்து விழுகிறார்கள். இன்னும் நல்ல புருஷனைத் தேடக்காத்திருக்கிறாள் சிறுக்கி. உன்னைப் போலடக்கமாய் வச்சிருந்தால் யார் வரக்காத்திருக்கா ?”

பார்வதி :—“ அடியம்மா ! உன் பெண் குசாலாய் சுவயம்வரம் வரித்துக்கொள்ளட்டும். நான் ஞானியைப்போலவே நல்லகாலத்தை எதிர் பார்க்கிறேன். ஈசுவரன் விடும் வழியை விடட்டும்.”

விசாலாட்சி :—“ அடி பார்வதி ! அந்த வீம்பு புடிக்காதே. என் பெண்ணுக்கு நல்ல ஆம்படையான் கிடைப்பன். உன் பெண்ணுக்கு கிடைக்கமாட்டான், வயது மாய்விடும். கல்யாணமாகாமல் தவிக்கநேரிடும். இராஜம்மாளுக்கு மனதிற் கிசைந்தவனுய் கிடைத்திருப்பானே யானல் கல்யாணமாய் எத்தனை நாள் ஆயிருக்கும் ? நீ இந்த மாதிரி அடக்கமாய் வச்சிருந்தா யாரும் சீந்தமாட்டா, பாத்துக்கோ.”

பார்வதி :—“ அடி விசாலம் ! நீ உன் இஷ்டப்படி செய்துகொள். உன் பெண் நல்ல வரனைத் தேடிக்கொண்டால் எனக்குஞ் சந்தோஷம் தான். நான் ஈசுவரனைத்தான் நம்பியிருக்கிறேன். அவர் விடும்வழி விடட்டும். எவனுவது மொண்டியாகவாவது சப்பாணியாகவாவது எங்காவது மூலே முடுக்கில் தங்கம்மாளுக்கு புருஷன் பிறந்திருப்பானன்றி, பிறவாமலிரான். காலம் வந்தால் தானே நடக்கிறது. உன் பெண்ணுக்கோ வயதாச்சு, அதை யடக்கி வீட்டில் நல்வழியில் இருக்கச்செய்தால், தன்னுலே எல்லாம் நடந்திருக்கும், இனியும் நடக்கும், பாதகமில்லே. ஐயோ ! இப்போ அது இருக்கிற நடத்தைக்குச் கல்யாணமில்லாமல் நிற்கப்போகிறதே என்றுதானம்மா சொன்னேன்.”

விசாலாட்சி :—நீ வேதாந்தம் படிக்கிருய், எனக்கு அந்த தத்வஞானம் வரவில்லே. இராஜம்மாளுக்குத் தான் முந்தி கல்யாணமாகிறதோ அல்லது தங்கம்மாளுக்குத்தான் ஆகிறதோ பார்ப்போமா ? அதைத்தான் பார்ப்போமே.” என்று சொல்லிக் கொண்டே தன்வீடு சென்ருள்.

பார்வதியம்மாளும் வாயில் கதவைத் தாப்பாளிட்டு உள்ளே சென்ருள். இவர்கள் சம்பாஷணை இம்மட்டோடு முடிந்தது. இனி நடப்பதைச் சற்றுச் கவனிப்பாம்.

* * * * *
* * * *
* * * * *

விசாலாட்சி யம்மாள் குமாரத்தியான இராஜம்மாளுக்கு வயது 15-ம் ஆய்விட்டது. அவள் நடத்தையைக்கண்டு ஒருவரும் அவளை வரிப்பாரின்றி கடைசியில் கல்யாணமில்லாமலே நின்ருள். வரவர தாயாருக்குமடங்கி நடப்பதில்லே; சிலதத்தாரி பையன்களைக்கூட்டிக்கொண்டு ஊரைவிட்டுப் போய்விட்டாள். பார்வதியம்மாள் சொன்னவார்த்தையானது அப்பொழுது விசாலாட்சி யம்மாளுக்கு ஞாபகத்திற்கு வந்தது. தன் பேதமையினுலேயே தனக்குத்தன்பெண்ணினுல் நேர்ந்த அவமானத்தை நினைக்க நினைக்க விசாலாட்சியம்மாளுக்குத் துக்கமதிகரித்தது. இராஜம் பயிரங்கமான இந்துநாடக கம்பனிகளில் வேஷம் போட்டுக்கொண்டாடத் தலைப்பட்டுவிட்டாள். நாடகங்களில் கத்திகள்சுழட்டுவதிலும், விதம்விதமாகத் தன்றேகத்தைவளைத்து கஸரத்துகள் செய்வதிலு மிகவும் பயிற்சி அடைந்தாள். தன்வயதொத்த பிள்ளைகளுடன் சரஸஞ் செய்யதுவக்கிவிட்டாள். இவளைப்பார்த்துதானே இப்பொழுதுஞ் சில இந்து பிராமணப்பெண்கள் சில நாடககம்பெனிகளில் துணிந்து சேர்ந்தாடுகிருர்கள் ! இராஜம்மாள் அழகும் வித்தையுமுடையவளே. ஆயினும் அவள் தன்புத்திரியை இளமைப்பருவந் தொடங்கியே நல்வழியில் செலுத்தாமல் தீயவழியில்

செலுத்தியதால் குலமகட்கிருக்கவேண்டிய தன்மை கெட்டுத்திரியலாயிற்று. கடைசியில் அவள் வேசியிலும் கடையளானாள். இவ்வாறு இராஜம் கெடுவதற்குக்காரணம் அவள்தாயாரான மாதுஸ்ரீ விசாலக்ஷியம்மாளே யன்றோ?

இராஜம் தன்வாழ்நாளை இங்கெழுதக்கூடாத பாபகிருத்தியங்களைச் செய்து கழித்துவந்தாள். அவளை ஸ்திரமாய்க்காப்பாற்ற எவனுக்கும் நம்பிக்கையுண்டாவதில்லை. ஆனால் யௌவனமிருந்தவரையில் இவளைக்கண்டவர்கட்கு ப்ரீதியிருந்தது. பின்பு "ஆசை அறுவதுநாள் மோகம்முப்பதுநாள்," என்று சொல்லும்வண்ணம், அவளுக்கு யௌவனம்போனபிறகு அவளைமெதுதாய் ஒவ்வொருவரும் கைநழுவ விட்டுவிட்டார்கள். அவளுடைய நிலைமையைப்பற்றி யோசித்துப்பாருங்கள். சவரக்ஷணைநிமித்தம் தன்தாயாரைத் தேடிச்செல்லவும் மார்க்கமேற்படவில்லை. வேறே புருஷனைத் தேடிக்கொள்வதற்கும் யௌவனம்போய்விட்டபடியால் அவளைத்திரும்பிப்பார்ப்பாரில்லை. பிறகு குடிக்கக்கஞ்சிக்கும் கட்டகந்தைக்கும் வழியில்லாமற் றவித்து பிச்சையெடுக்க வீதிவீதியாய்வந்து விட்டனள். குலமகளாயிருப்பவர் கெட்டு வியபிசாரஞ் செய்வார்களானால் முடிவில் இதேமாதிரியான ஸ்திதிக்கு வந்துவிடுவார்களென்பதற்கு நாம் அநேகதிருஷ்டாந்தரங்களைக் கண்டிருக்கிறோம்.

இப்படியே இராஜம் பலவிடங்களில் பிச்சைவாங்கித் திரியுங்கால், ஆதரவற்றவனும், பிறவிக்குருடனுமான ஓர்வயதுசென்ற கிழவனைத் தன்புருஷனாகச் சேர்த்துக்கொண்டு தன் மீதிநாட்களையுங் கழித்தனள்.

ஏ! பெண்காள்! சுவயேச்சையாய்த் திரிந்த இராஜத்தின் அதிர்ஷ்டந்தான் இவ்வாராயிற்றே. இனிபார்வதியம்மாள் குமாரத்தியான தங்கம்மாளின் கதையைச் சற்றுவிசாரிப்போம்.

(இன்னும்வரும்.)

GENERAL NEWS.

சமாசாரக் குறிப்புகள்.

(64-65 வது பக்கத்துடர்ச்சி.)

உசூரில் சூடேசுவரர் கோயிலில் சுவாமிக்குச் சாத்தப்பட்டிருந்த சுவர்ண கவசத்தைச் சில திருடர்களின் தூண்டுதலினால் அபகரிக்கச்சென்ற அந்தணனுக்குக் கண்கள் போய், கடைசியில் கோயிலினின்றும், அவனை வெளியே கொண்டு வந்தபோது முன்போலவே கண்கள் பிரகாசமாகத் தெரிந்ததென்று முன்னமேயே சொல்லியிருக்கிறோமே. அந்த சூடநாதேசுவரர் கோயில் ஓர் சிறு குன்றின்மேலுள்ளது. அக்குன்றை விட்டுக் கீழே இறங்கிவந்ததும், போலீசார் இதை அறிந்து அவ்வந்தணனைப் பிடித்துக்கொண்டு ஸ்டேஷனுக்குச் சென்றதில், அவனை விசாரிக்கும் பொழுது அவன் உண்மையை உரைத்தனன். உடனே அவனைத் திருட்டுக் குற்றத்திற்காக சார்ஜி செய்து மேற்படி தாலூகா ஸ்டேஷனரி சப் மாஜிஸ்திரேட்டார் அவர்கள் அம்மறையோனுக்கு 6 மாதங்கடுங்காவல் சிக்ஷை விதித்தார்கள்.

ஓர் விநோத மரணம் :—சேலஞ்சில்லா உசூர் தாலூகாவைச்சார்ந்த டெங்கிணிக் கோட்டைக்கடுத்த ஓர் சிறு கிராமத்தில் ஓர் *'கௌடன்' பிரசித்தமாயிருக்கிறான். அவனுக்கு ஓர் தென்னந்தோப்பு இருக்கிறது. அதில் சுமார் 300

* 'கௌடன்' என்று கௌண்ட ஜாதியில் ஒருவனுக்குச் சொல்லுவது. கௌண்டனை கன்னடியர்கள் 'கௌடன் என்கிறார்கள்.

மையைச்சொல்லு, இது இன்ன கௌடனுடைய தோட்டக்காய்கள் போல விருக்கின்றனவே," என்றான். அதற்கும் அவன் ஆமென்று ஒப்புக்கொள்ளவில்லை. பின்னும் தோட்டக்காரன் அவனைப் பார்த்து, "நீ ஒப்புக்கொள்ளாவிடில் போனால் போகிறது", நீ விற்பனைக்குக் கொண்டு வந்திருக்குந்தேங்காய்கள் அந்தத்தோட்டத்திலுள்ள மூன்று குறிப்பிட்ட மரங்களின் காய்களாகத்தா னிருக்கவேண்டும்; அந்த மரங்களில் வெகுநாளாய் ஒரு பெருத்த கிருஷ்ண சர்ப்பமிருக்கிறது; அதனால் அம்மரங்களின் காய்களை அத்தோட்டக்காரன் எப்போதும் பறிப்பதில்லை; பிறரையும் பறிக்கவிடுவதில்லை; இப்பொழுது இந்தக்காய்களைப் பறித்தவன் எவ்வண்ணம் அம்மரங்களிலேறிப் பறித்தானோ", என்றான். அவன் அவ்வாறு சொன்னது தான் தாமதம் மரமேறினவன் கண்கள் சுழன்று நமனுலகெய்தினான். உடனே தோட்டக்காரனும் சந்தேகம் தெளிந்து மறைந்தான். என்ன ஆச்சரியம் பாருங்கள். சர்ப்பந்தீண்டினதும் இறக்காதமனிதன். 4-5-நாள் கிரமித்து சர்ப்பந்தீண்டியதாகத் தெரிந்ததும், சுருக்குசுருக்கு என்று அன்று மரமேறினதினம் குத்தினதாகவும் கொசுகடி என்று வினைத்ததானது அந்தப் பாம்பாகத்தானிருக்க வேண்டு மென்றும் அவன் மனதில் எண்ணிய உடனே இறந்து போகவல்லவா நேரிட்டது. சர்ப்பந்தீண்டியதாய்த் தெரியாமலேயிருந்தால் இன்னும் எத்தனைகாலம் இம்மண்ணுலகில் வசிப்பானோ! என்ன ஆச்சர்யம்! எல்லாவற்றிற்கும் மனமேகாரணமா யிருக்கிறதென்பதற்கு இது ஓர் விதர்சனமல்லவா?

டில்லியில்தர்பார் நடந்ததனால் ரெயில்வேகம்பெனியாருக்கு ஜனவரி மீ 1உ முதல் 17உ வரையில் சென்றவருஷம் இதேகாலத்தில் கிடைத்தவரும்படியைக் காட்டிலும் ஆறுலக்ஷம் ரூபாய் அதிகமாய்க் கிடைத்திருப்பதாய்ப் பத்திரிகைகள் கூறுகின்றன.

ஓர் உற்பாத அதிசயம்:—தூத்துக்குடிக்குத் தென்மேற்கே சுமார் 7-மைல் தூரமுள்ள தெற்கு சிலுக்கம்பட்டி யென்னுமூருக்கு வடகிழக்கில் பெரும்பாதைக்குச் சமீபமாய்க் கீழ்புறம் சுந்தரரெட்டியார் புஞ்சைநிலத்தில் நாளதுமாதம் 8உயன்றிரவு பீரங்கி இடிபோன்ற சப்தம் பூமியினின்றுண்டாகி 12-அடி சதுரமான கிணறு ஒன்றும், ஆறு அடி அகலத்தில் ஆறு கிணறும், 9உ மாலை 5-மணிக்கு ஷை ஊருக்கு நேர் கிழக்காய் மடம் கட்டுவதற்காக வாங்கப்பட்டிருக்கும் சமுதாய நிலத்தில் முன்போலவே பெருஞ் சப்தமும் புகையுமுண்டானதினால் 7 அடி அகலத்தில் இரண்டு கிணறும் தோன்றியிருக்கின்றன. முதலாவதாய்க் கூறப்பட்ட 12-அடி சதுரமான கிணற்றின் ஆழம் அளவிலடங்காதிருக்கின்றது. ஆனால் இதின் சலம் மாத்திரம் திவ்யமாயிருக்கிறது. மற்றக் கிணறுகள் 4-அடி முதல் 9-அடி ஆழம் இருப்பதோடு உப்புச்சலமாயுமிருக்கிறது. தொலை விடங்களிலிருந்து திரளான சனங்கள் சென்று அவ்வதிசயத்தைக் கண்ணுற்று வியப்படைகின்றனர். ஆனால் ஆரம்பத்திலுண்டான திகில் இப்போதில்லை. இதற்கடுத்த மடத்தூர் என்னும் கிராமத்திலும் ஒரு கிணறு மேற்கண்ட விபரப்படி உண்டாயிருப்பதாகக் கேள்விப்படுகின்றோம்.

மொறக்கோ கலகக்காரர்:—மொறக்கோ நாட்டில் சுல்தானுக்கு விரோதமாகக் கலகஞ்செய்து வருகிற கலகக்காரர் சுல்தானிடம் அகப்படுவார்களானால் அவர்களின் கதி யெப்படி யாகுமென்று அந்நாட்டு வழக்கங்களை யறிந்த டாக்டர் டில்லன் என்பவர் எழுதியிருக்கிறார். ஐந்து வருஷங்களுக்கு முன்னே இப்படிப்பட்ட ஒரு கலகமுண்டானபோது சுல்தான் தனது இராணுவ வீரர்களைப்

பார்த்து "நீங்கள் வெட்டிக்கொண்டு வருகிற ஒவ்வொரு கலக்காரரின் தலைக்கும் மூன்று ஷில்லிங் தருவேன்" என்று கட்டளை கொடுத்தாராம். பணத்துக் காசைவைத்த அவர்கள் வழியில் காணப்பட்ட அமைதியுள்ள குடி ஜனங்களில் அநேகரையும் ஒட்டக்காரர் அநேகரையும் தலைகளைவெட்டிக்கொண்டுபோய்க் காட்டிப் பணம் வாங்கினார்களாம். கைதிசெய்யப்படுகிற கலகக்காரர் கழுத்துக்களில் பாரமான சங்கிலிகளைக் கட்டி முப்பது நாற்பதுபேரை வரிசையாய் இணைத்து நிற்கப்போட்டாவது படுக்கப்போட்டாவது கொல்வது சுல்தானின் வழக்கமாம். ஆங்கிகார காலத்தில் பிடிபட்ட கலகக்காரரை நிறுத்தி, அவர்கள் வலதுகைகளைக் கணுக்கணுக்கு எலும்புவரைக் கத்தியாலறுத்து அந்தக் காயத்தில் உப்பைவைத்து தேய்க்கப்பட்டதாம். மொருக்கோ கலகக்காரரின் கதி யித்தகையதுதான் என்று அவர் எழுதியிருக்கிறார்.

டில்லிதர்பாரும் இந்திய பத்திராதிபர்களும்:—டில்லி தர்பாருக்கு லார்டு கர்ஸன் இந்தியாவில் வர்த்தமானப் பத்திரிகைகள் பிரசுரம்செய்யும் பத்திராதிபர்களில் சிலரை அழைத்திருந்தாரென்று நமது நேயர்களுக்குத் தெரியும். எல்லாப் பத்திராதிபர்களையும் அவர் அழைப்பதும்; எல்லாரும் பேசுவதும் சாத்தியப்படாத காரியமன்றுதலால் ஆங்கிலோ இந்திய பத்திராதிபர்களிலும் முக்கியஸ்தரான சிலரை மட்டும் அழைக்கப்பட்டிருந்தது. இவர்களை தர்பார் காலத்தில் வெவ்வேறாகப் பிரித்து வைத்திருந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆங்கிலோ இந்திய பத்திராதிபர்களையெல்லாம் ஓரிடத்திலும், இந்தியபத்திராதிபர்களை மற்றோரிடத்திலும் பிரித்து வைக்கப்பட்டிருந்ததாம். இப்படி வேற்றுமைகாட்டிப் பிரித்து வைக்கப்பட்டதன்றி இந்திய பத்திராதிபர்களைச் சவரக்ஷணை செய்ய பங்காளத்துச் சிவிலியனாகிய மிஸ்டர் குப்தா என்கிற ஒரு இந்தியனை நியமிக்கப்பட்டாராம். இவர் தம் பார்வையிலிருந்த சுமார் 40-இந்திய பத்திராதிபர்களையும் ஒரே வகையாய்ப் பாராமல் பங்காளத்தாரை ஒருவிதமாகவும், மற்ற இந்தியரை ஒருவிதமாகவும் பார்த்தது எல்லாவற்றிலும் விசனமான காரியமென்று ஒரு பத்திரிகை கூறுகிறது. ஒரு இந்திய சிவிலியனிடத்திலேயே நாம் பக்ஷபாதத்தைக் காண்போமானல் ஒரு ஐரோப்பியனிடத்தில் அதை எதிர்பார்ப்பது அவ்வளவு அதிசயமாகுமா?

தந்திவிகிதங்களைக் குறைக்கும்படி பங்காளாவர்த்தகசபையார் கேட்டுக்கொண்டபடி 'எவ்வகைத்தந்திகட்கும் 4 அணாவே கட்டணம் வாங்கவேண்டுமென்றும்,'' 'ஒருதந்திக்கு 4 வார்த்தைகட்குமேல் அனுப்பக்கூடா'தென்றும் 'பயோனீர்' பத்திரிகை அபிப்பிராயப்படுவதாக 'தஞ்சை ஜனநேசன்' கூறுகிறது.

மதுரைஜில்லா கலெக்ட்டராகவிருந்த மிஸ்டர் கார்டியூ துரையவர்கள் சிலநாளைக்குமுன் மதுரைத்தமிழ்ச்சங்கத்திற்குச் சென்றுசங்கத்திற்கென்று மிக்கபாடுபட்டுழைத்துவரும் மகாகனப்பொருந்திய மிஸ்டர் பாண்டித்துரைத் தேவர் அவர்கட்கிருக்கும் நன்முயற்சியைப் புகழ்ந்து அச்சங்கத்தின் விஸிட்டிங் புக்கில் (Visiting Book) சாட்டிபை செய்திருக்கிறார்களாம். அவர் மதுரையிலிருந்து சென்னைக்குப் பிரயாணமாகவே அவர்வேலையைப் பார்க்க நியமிக்கப்பட்டிருக்கிற மிஸ்டர் C. G. டாட்ஹண்டர் சார்ஜ் ஒப்பித்துக்கொண்டார், மிஸ்ட்டர் கார்டியூ ஜனங்களால் மிகவும் விரும்பப்பட்ட கலெக்டரானதால், அவரை மாற்றிவிட்டதைக் குறித்து எல்லாரும் விசனப்படுகிறார்கள்.

NOTICE.

Although there are several journals world-wide, yet we request the learned public to lend a helping hand towards the advancement of this journal also.

அறிவிப்பு.

உலகிலுள்ள ஜனங்கள் புருஷார்த்தங்களை அறிந்தனுபவித்தற்கு, பத்திரிகைகள், தருமாதிகளை அன்னோருக்கு ஞாபகப்படுத்திக்கொண்டு சஞ்சரிப்பவைகள் பல உளவாயினும், வித்வான்கள் பாஷையும் நல்லொழுக்கமும் அபிவிருத்தியடைவதில் நோக்கமுடையவர்களாகலின், இந்நூதனத்தமிழ்ப் பத்திரிகையையும் ஆதரிப்பதற்குக் கடமைப்பட்டிருத்தலால், அத்தகைய கல்விமான்கள் இடையில் தளர்ச்சியடையாவண்ணம் பாதுகாத்து உதவி செய்வார்களென நம்புகிறோம்.

---

1. திரவிடமா பாடியத்தாராதி முனிபுங்கவர்கள்
   பரவாவடுதுறை வாழ்பண்பார்—குருமரபுக்
   சோர்தீபமாகி யொளிறம்பலவாணப்
   பேரானடி யெமக்குப்பேறு.
2. ஆதலினீ யன்னானடிக்கமலஞ் சென்றிறைஞ்சப்
   போதுதியேலஞ்சுகுணசுந்தரதா—வாதவருட்
   குன்றன்னா னுசிதரக் கொண்டிக் குவலயத்திற்
   சென்றிருமாந்தே திரியலாம்.

ஆற்றுப்படை.

1. வேற்கரசே யென்ன விபுதர்தமைக்காத்தருளும்
   பார்க்கரசே தபதித்துரையைப்—போற்றுதியேல்
   இன்புற்றுவாழ் சுகுணசுந்தர விம்மேதினியில்
   வன்புற்றுச் சூழ்ந்துவரலாம்.

வேண்டுகோள்.

2. எதுபதிச்செல்வாமென்றெண்ணி யிடருழக்கு
   மாதுலர்போலுஞ் சுகுண சுந்தரநின்—சீத
   மதிக்குடைக்கீழ்தங்க மதுரமொழிச் சேது
   பதிப்பாற் கரதுரை கண்பார்.

ஆற்றுப்படை.

3. அறுசுவைபோலென்று மவனியுளோராயப்
   பெறு சுகுணசுந்தரநீ பெட்பி—னுறுதற்
   குரைத்தேவர்பாலெ னுலகுபுகழ் பாண்டித்
   துரைத்தேவர் பாலடைந்து சொல்.

ADVERTISEMENTS : Favourable Rates.—Yearly Rs. 100 per page. For ½ a page Rs. 50. English advertisements at As. 6 per line. For other details apply to the Managing Proprietor, "Suguna Sundaram" Office, Turaiyur, Musiri Taluk.

NOTICE TO OUR SUBSCRIBERS.

As the *Suguna Sundaram* completes its first year with the April issue, it will enter upon the second year of its existence from the May issue. It is hoped, that all our Subscribers will not only continue their patronage but, will further encourage the wide circulation of the Journal. Subscribers are earnestly requested to remit their Subscriptions in advance, before the 30th June, at the favourable rates of Rs. 2-8-0. All subscriptions that remain unpaid after that date will be collected at the usual rate of Rs. 3-1-0 by V. P. Post.

நமது சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு.

நமது சுகுணசுந்தரப் பத்திரிகைக்கு நாளது வருஷம் எப்ரல்மாதத்துடன் முதல் வருஷம் முடிவுபெற்று, மேமாதம் துவக்கி இரண்டாவது வருஷம் ஆரம்பமாகிறது. நமது சந்தாதாரர்கள் இந்த முதல் வருஷத்தில் ஆதரித்து வந்தபடியே அடுத்த வருஷமும் இதை ஆதரித்து வருவதோடுகூட இப்பத்திரிகை முன்னுக்கு வருமாறு தக்க முயற்சி எடுத்துக்கொள்ளுவார்களென்று நம்பப்படுகிறது. சந்தாதாரர்கள் தங்களுடைய அடுத்த வருஷத்திய சந்தாவை முன்னாடியே ஜூன்மாதம் 30-ம் தேதிக்குள் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது, முன்னாடி சந்தா செலுத்தாத எனையோர்கள் அந்தத் தேதிக்குப் பிறகு ரூ. 3—1—0 வீதம் வி. பி. தபால் மூலமாய் செலுத்தி நாம் அனுப்பும் பத்திரிகையைப் பெற்று ஆதரிக்க நேரிடுமென்பதை இதன் மூலமாய்த் தெரிவித்துக் கொள்ளலாயிற்று.

சுகுணசுந்தரம் ஆபீசு,
துறையூர்.

மானேஜர்.

TO OUR CONTRIBUTORS.

The Editor will thankfully receive all suggestions towards the improvement of the journal.

Suguna Sundaram Office,
Turaiyur.

விஷயமெழுதும் நேயர்கட்கு.

இப்பத்திரிகை விருத்திக்கு வரும்பொருட்டு அப்போதைக்கப்போது தெரிவிக்குஞ் சமாசாரங்களை வந்தனங்களுடன் அங்கீகரிக்கப்படும்.

சுகுணசுந்தரம் ஆபீசு,
துறையூர்.

T. S. S.